கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : *(அ) இல்லை.*

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Jeep in Development Blocks

* 50 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to withdraw the jeeps from the Development Blocks and if so, the reasons for the same ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: *சமுதாய வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள மோட்டார் வாகனங்களை உபயோகிக்கும் விதிகளை மாற்றியமைக்கும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.*

திரு. மீ. கலியாணசுந்தரம்: *நான் கேட்ட கேள்வி, 'ஜீப்களை ப்ளாக்குகளிலிருந்து எடுத்துவிடப் போகிறீர்களா?' என்பது. விதிகளை மாற்றி அமைக்கும் விஷயம் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். அப்படியானால், ஜீப்கள் தொடர்ந்து அவர்களிடத்திலேயே இருக்கும் என்று எதிர்பார்க்கலாமா?*

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: *இப்பொழுது இருந்துகொண்டிருக்கும் விதிகளை மாற்றியமைக்கும்போதுதான் அதனுடைய முடிவு என்ன என்று தெரியும்.*

திரு. கே. ஏ. மதியழகன்: *அந்த ஜீப்கள் உத்தியோகத்திற்குச் சம்பந்தம் இல்லாத வேறு பல காரியங்களுக்கு, துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருகிறது என்ற புகார் அமைச்சருக்கு வந்திருக்கிறதா?*

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: *அப்படி கனம் அங்கத்தினருக்கு ஏதாவது புகார் இருந்து, அமைச்சருக்கு எழுதியனுப்பி கவனத்திற்குக் கொண்டுவந்தால், சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.*

திரு. கே. ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : *சமுதாய வளர்ச்சி வட்டாரங்களில் இருக்கின்ற ஜீப் கார்கள் மாதத்தில் இருபது நாட்களுக்கு மேல் ஆர். டி. ஓ., தாசில்தார் ஆகியவர்களுக்குத்தான் உபயோகப்படுகின்றன. அதனால் வளர்ச்சி வட்டாரத்திலே நடைபெறவேண்டிய வேலை மிகவும் தடைபடுகிறது. ஆகவே இத்தனை நாட்கள் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியின் வசம் ஜீப் இருக்கவேண்டும், இத்தனை நாட்கள் அபிவிருத்தி வேலைகளுக்கு உபயோகப் படுத்தப்பட வேண்டும் என்ற வகையில் ஏதாவது விதிமுறை செய்யப்படுமா ?*

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : *ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, தாசில்தார் போன்றவர்களும் சமுதாய அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாகத்தான் அந்த ஜீப்களை உபயோகப்படுத்தி வருகிறார்கள்.*

21st January 1965]

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஜீப் கார்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால் அவற்றை எடுத்துவிட வேண்டும் என்ற இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களின் கருத்து இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? அதைக் குறித்து இந்த அரசாங்கம் என்ன கருதுகிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்தியத் தலைமை அமைச்சர் பார்லிமென்டில் இது சம்பந்தமாகப் பேசியதை யெல்லாம் கனம் அங்கத்தினர் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். முன்பு பேசும்போது purposeful use என்று தான் குறிப்பிட்டார். பூரணமாகவே எடுத்துவிட வேண்டும் என்று கூறவில்லை. சில தவறு நடக்கிறதென்றால், ஒழுங்குமுறைகளை இன்னும் கடின மாக்கினால் சரியாகப் போய்விடும். கிராம அபிவிருத்தி வேலை களுக்காகச் சென்றுவிட்டு, இரவு நேரங்களில் அதிகாரிகள் திரும்ப வேண்டியிருக்கலாம். கிராம முன்னேற்றத்தைப் பற்றிய திட்டங் களைக் கவனிக்கவும், விவசாய கிராம மக்களோடு தொடர்பு கொண்டு, உரையாடுவதற்கும் அதிகாரிகள் அடிக்கடி கிராமப் புறங் களுக்குப் போக வேண்டிய சந்தர்ப்பங்களில் ஜீப்பின் உபயோகம் தேவைப்படுகிறது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான் இந்தியத் தலைமை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கும் ஜீப்களை எடுத்துவிடப் போவதாக அமைச்சர் அவர் கள் பதில் சொல்லவில்லை. அந்த ஜீப் நீடித்திருக்கும் என்றும் அவர் சொல்லவில்லை. இப்படி ஒரு சந்தேகம் இருக்கிறது. அந்த ஜீப் களை எடுத்துவிட்டால், அங்குள்ள அதிகாரிகள் துரிதமாக வேலை செய்வதற்கு என்ன மாற்று வசதி செய்து கொடுக்கப் போகிறார் கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர்: ஜீப்களை எடுத்துவிடப் போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லவில்லையே.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: அவை இருக்கும் என்றும் அவர்கள் சொல்லவில்லை.

கனம் சபாநாயகர்: சீர்திருத்தி எப்படியாவது அதை வைத்து நடத்த வேண்டும் என்று தான் சொல்கிறார்.

திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் சபாநாயகர் அவர் களே, பஞ்சாயத்து யூனியன்களிலே கொடுக்கப்பட்டிருக்கிற ஜீப்களை ரெவின்யூ டிவிஷனல் ஆபிசர், தாசில்தார் போன்றவர்கள் அடிக்கடி எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அதனால், கலெக்டருக்குக் கொடுத்திருக்கும் 'வான்'களும், தாசில் தாருக்குக் கொடுத்திருக்கும் 'வான்'களும் அதிகப்படியான உப யோகப்படுத்தப்படவில்லை. பொதுவாகப் பார்க்கப்போனால், இந்த ஜீப்கள் அடிக்கடி 'ரிபேர்' என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கின்றன. ஆகவே, ஐந்து அல்லது பத்து வருஷங்களுக்கு ஒரு முறை அவற்றைப் புதுப்பிப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கனவே 'கண்டெம்' ஆன ஜீப்கள் மாற்றியமைக்கக்கூடிய முறையில் இருந்து கொண்டிருந்தன. தேசிய நெருக்கடிப் பிரச்னை தோன்றுவதற்கு முன்னுல் தான் பழைய ஜீப்களைக் கழிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தோம். தற்போது குறிப்பாக, மலை ஜாதியினர் வசிக்கக்கூடிய பிராந்தியங்களில் அம்மாதிரி செய்யவேண்டும் என்று இருக்கிறது. என்ருலும், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி போன்றவர்கள், ஜீப்களை எடுத்துக் கொண்டுபோகும்போது ப்ளாக் வேலைகளுக்கு இடைஞ்சல் இல்லாமலும், ஊறு விளைவிக்காமலும் பார்த்துக் கொள்ளவேண்டியது தான். அதற்கு மாருக அவர்கள் நடந்து கொண்டதாகத் தகவல் கொடுத்தால் அதைப்பற்றி, விதிகளை மாற்றியமைக்கும்போது பரிசீலிக்கலாம்.

திருமதி சி. குழந்தையம்மாள்: அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது பொதுவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மாதிரி தான் சொன்னுர்கள். பொதுவாக நடவடிக்கை எடுத்தால் வேலை நடப்பதில்லை. பஞ்சாயத்து யூனியன்களில் கொடுக்கப்பட்டிருக்கும் ஜீப்களைக் கொண்டு எதிர்பார்க்கப்படும் வேலைகள் முழுவதும் நடக்கத்தக்க அளவில் ஜீப்கள் அங்கு உபயோகத்திற்குக் கிடைக்கின்றனவா என்ருல், இல்லை. எப்பொழுது பார்த்தாலும் 'ரிபேர்' என்ற நிலையில் அவை இருக்கின்றன. ஜீப்கள் உடனுக்குடன் கண்டிப்பாக ரிபேர் செய்யப்பட வேண்டும்; அல்லது வேறு ஜீப்கள் வாங்கிக் கொடுக்கப்படவேண்டும்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ப்ளாக்கிலுள்ள ஜீப்களை ரிபேர் செய்வதற்கு என்று ஓர்க்ஷாப்கள் இருக்கின்றன. எந்த ப்ளாக்கிலாவது அதிக மோசமாக ஜீப்கள் இருக்கின்றன, ஓர்க்ஷாப்பிற்குச் சென்று ரிபேர் செய்யப்பட்டுத் திரும்பி வருவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது என்கிற தகவல் இருந்து, அதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: ப்ளாக் வேலை இல்லாத நேரங்களில் இந்த ஜீப்கள் சினிமாக் கொட்டகைகள் முன்பும், காய் கறிக் கடைகள் முன்பும், ஜவுளிக் கடைகள் முன்பும் பல மணி நேரம் நிற்கின்றன. இதைப்பற்றிய விவரங்கள் சேகரித்து, அப்படியெல்லாம் வேலை இல்லாத நேரங்களில் ஜீப்கள் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க ஆவன செய்வார்களா?

கனம் சபாநாயகர்: 'எழுதியனுப்பினல், கவனிக்கிறேன்' என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்த ஜீப்கள் நல்ல முறையில் பயன்படுத்தப்படுவதற்கான வகையில் கனம் அங்கத்தினர்களும் ஒத்துழைப்புத் தரலாம். அரசாங்கம் அப்போதைக்கப்போது வரும் புகார்களைக் கவனித்து, சில நடைமுறைகளை அனுசரிக்கும்படி உத்தரவிட்டிருக்கிறது. ஜீப்களை குறிப்பிட்ட வட்டாரத்திலிருந்து, வேறு இடங்களுக்கு எடுத்துச்செல்லக்கூடாது, மேலதிகாரிகள் கண்காணிப்பாக இருக்கவேண்டும் 'லாக் புக்'கை

ஆர். டி.ஓ., கலெக்டர் கவனிக்க வேண்டும் ஐந்து பேர்களுக்கு மேல் ஜீப்பில் ஏறக் கூடாது, 'ஸ்பீட்' விஷயத்திலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், பிளாக் ஆபிஸிலிருந்து தங்களுடைய வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகக் கூடாது, சட்ட மன்ற உறுப்பினர்கள், மேல் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட, ஒரு வாரத்திற்கு முன்பு தகவல் கொடுத்துவிட்டு, பிளாக் அதிகாரி களுடன் சென்று கிராம வேலைத் திட்டங்களைப் பார்க்கலாம். என்ற வகையில் ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருப்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு. கே. ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: அபி விருத்தி வேலைகளுக்கு இருக்கிற ஜீப்புகளுக்கு குறிப்பிட்ட அளவு தான் பெட்ரோல் கொடுக்கப்படுகிறது. மற்ற வேலைகளுக்கும் ஜீப்புகளைப் பயன்படுத்துகிறார்கள். அதனால் வட்டார வேலைகளுக்கு என்று எடுக்கிறபோது பெட்ரோல் இல்லாமல் போகிறது. ஆகவே அதிகாரிகள் தனி வேலைகளுக்கு ஜீப்புகளை எடுக்கும்போது தனியாகப் பெட்ரோல் வாங்கி உபயோகித்துக் கொள்ளவேண்டும் என்று ஏற்பாடு செய்ய முடியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கனவே அத்தகைய கண்டிப் பான விதிகள்தான் இருக்கின்றன. மற்ற அதிகாரிகளுக்கு வேறு வாகன வசதி இருப்பதனால் வட்டார அபிவிருத்தி வேலைகளுக் காகக் கொடுக்கப்பட்டுள்ள ஜீப்புகளை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

திரு. இரா. நாராயணன்: வட்டார வளர்ச்சிக்காகக் கொடுக்கப் பட்ட ஜீப்புகள் பழுதடைந்தால் அதை ரிபேருக்கு அனுப்பினால் மூன்று நான்கு மாதம் ஆகிறது ரிபேர் ஆகி வருவதற்கு. துரித மாக ரிபேர் செய்து அனுப்பவும், நீண்ட காலமாகும்போல் இருந்தால் மாற்று ஜீப்புகள் கொடுக்கவும் ஏற்பாடு செய்வார் களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தேசிய நெருக்கடி தீரும் வரை யில் புது ஜீப் கொடுக்க உத்தேசம் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், கமிஷனர்களும டிரைவிங் கற்றுக் கொள்வதற்காக இந்த ஜீப்புகளை உபயோகப்படுத்துவதன் காரணத்தினால் தான் இவை சீக்கிரம் பழுது அடைந்துவிடுகின்றனவா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அவ்வாறு செய்யக் கூடாது; எங்காவது அப்படி நடக்கிறது என்று புகார் செய்தால் உடனடி யாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ரெவின்யூ தாசில்தார்கள் ஜீப்பில் பறக்கும் போது ஸ்பெஷல் தாசில்தார்கள் நடந்து கொண்டே இருக்கிறார்களே, இவர்களுக்கும் ஜீப் கொடுக்கக் கூடாதா?

TRUTH ALONE TRIUMPHS

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ரெவின்யூ தாசில்தாருக்கு இதில் சம்பந்தமில்லே.

திரு. இராம. அரங்கண்ணல் : பல பஞ்சாயத்து யூனியன் களிலே தலைவர்களுக்கும், ஆணையாளர்களுக்கும் தகராறு வருவதற்குக் காரணம் இந்த ஜீப் என்று கூறப்படுகிறது. ஆகவே யாராவது ஒருவர் மட்டுமே உபயோகப்படுத்த வேண்டுமென்று உத்தரவிட முடியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தகராறு வருவதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். இதுதான் காரணம் என்பதை ஏற்றுக் கொள்வதற்கில்லே.

திரு. கரு. சீமைச்சாமி : மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு என்று ஒரு வொர்க்ஷாப்பு தான் இருக்கிறது. அதனுல் சின்ன பழுது ஏற்பட்டாலும் ரிபேர் செய்வதற்குக் காலதாமதமாகிறது. இன்னும் ஒரு வொர்க்ஷாப்பாவது வைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, வரவு செலவுத் திட்டம் விவாதிக்கப்படுகிறபோது இன்னும் நன்ருக இதைப் பரிசீலனை செய்யலாம். நான் கனம் அங்கத்தினர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு யோசனை கூடச் சொல்வேன். இந்த ஜீப்களினுல் தானே இவ்வளவு தகராறுகளும் வருகின்றன. ஆகவே இந்த ஜீப்புகளை எல்லாம் எடுத்துவிட்டு இந்த மன்றங்களுக்கு மாட்டு வண்டிகள் கொடுத்து விடலாம். வேண்டுமானுல் ஒரு ஒற்றை மாட்டு வண்டி, ஒரு இரண்டு மாட்டு வண்டி என்று கொடுத்துவிடலாம். தலைவர்கள் ஒற்றை மாட்டு வண்டியைக் கட்டிக்கொண்டு போனுல், ஆணையாளர்கள் இரண்டு மாட்டு வண்டியைக் கட்டிக் கொண்டு போக முடியும். கனம் அங்கத்தினர்கள் இந்த யோசனையைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி சி. குழந்தையம்மாள்: தலைவர் அவர்களே, எங்கள் வட்டாரத்தில் ஜீப் ரிப்பேர் ஆகி வொர்க்ஷாப்புக்கு அனுப்பினுர்கள். சின்ன ரிபேர் தான், வெல்ட் பண்ண வேண்டும். வெல்டர் பதினைந்து நாள் லீவு போட்டிருந்தான் என்பதனுல் அப்படியே வைத்துவிட்டார்கள். இந்தமாதிரியாக ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று தான் கேட்டேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தக்க உத்தரவுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. துரிதப்படுத்த முயற்சிக்கிறேன்.

திரு. ர. ஜீவரத்தினம் : பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கடுமையான உத்தரவு போட்டு இருந்தும் அதுபற்றி பல தகாறுகள்

21st January 1965]

ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு கனம் முதல் அமைச்சர் சொன்னது போன்ற யோசனையை ஏற்றுக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

திரு. சி. பொன்னுசாமி: சபாநாயகர் அவர்களே, ஜீப்புகளுக்கு அதிகப்படியான வேலை இருப்பதனால் ஒரு மாட்டு வண்டியையும் வைத்துக் கொள்ளலாம் என்பதாக உத்தரவு போடுவார்களா?

கனம் திரு. சே. ம. மஜீத்: பஞ்சாயத்துகளுக்கு மாட்டு வண்டி கொடுப்பது என்று வந்தால் விவசாய வேலை தடைபடுமோ என்று பயமாக இருக்கிறது.

New road.

* 51 *Q.*—Sri C. SRINIVASAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the present stage of the proposal to form a road from Kalpiravu near Manamadurai in Ramanathapuram district linking Madurai-Ramanathapuram Road near Pasalai Kanmoi?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அத்தகைய திட்டம் ஆலோசனையில் இல்லை.

கஸ்தூரிபாய் காந்தி கன்னியா குருகுலம், வேதாரண்யம்

* 52 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வேதாரண்யம் கஸ்தூரிபாய் காந்தி கன்னியா குருகுலத்திற்கு 1964-65-ம் ஆண்டிற்கு நன்கொடையாக, பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து ரூ. 300 விதம் கொடுக்கும்படி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் உத்திரவு போடப்பட்டதா?

THE HON. SRI S. M. A. MAJID: Permission has been given to such Panchayat Unions and Panchayats in Thanjavur District as are desirous of making contributions to the Kasthuriba Gandhi Kanya Gurukulam and pass resolutions each year to that effect, subject to the condition that the amount contributed by each does not exceed Rs. 300 and Rs. 50 respectively and the further condition that there are surplus funds available in their general accounts.

திரு. ஆ. கு. சுப்பையா: இந்த கன்யா குருகுலத்திற்குப் போதுமான நிதி வசதி இல்லை என்பதற்காக அரசாங்கத்திலிருந்து இந்த உத்தரவு போட்டு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் அதிகப்படியான நிதி வசதியை அரசாங்கத்தில் இருந்து செய்வார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ப்ளாக் சம்பந்தப்பட்ட வரையில் நான் சொன்னேன். மற்றபடி இந்தக் கேள்வியை முதல் அமைச்சர், கல்வி அமைச்சர் ஆகியவர்களிடத்தில் போட வேண்டும்.